சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண்.161/2022

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாயக்காள் | வயது | 68 |
| க/பெ | பொன்னியப்பன் | வட்டம் | அன்னூர் |
| விலாசம் | குப்பனூர் ஆத்திக்குட்டை | மாவட்டம் | கோயம்புத்தூர் |
| | | தொழில் | - |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எனது அப்பாவின் சொத்தில் பாகம் கோரி தாக்கல் செய்து உள்ளேன். எனது அப்பாவுக்கு எந்த வகையில் சொத்து வந்தது என்று ஏதாவது ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்து 50 வருடங்கள் இருக்கும். எனது அப்பா உயிருடன் இருந்த போதே எனக்கு திருமணம் ஆகி விட்டது என்றால் சரி தான். எனக்கு 3 பிள்ளைகள். நான் தற்போது சிறுமுகை அருகில் உள்ள இடுகம்பாளையத்தில் குடி இருக்கிறேன். நான் திருமணம் ஆனது முதலே எனது கணவர் வீட்டில் தான் குடி இருக்கிறேன் என்றால் எனது கணவருடன் எனது பெற்றோர் வீட்டில் தான் குடி இருந்தேன். வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு தான் எனது கணவர் என்னை திருமணம் செய்து கொண்டார். இந்த விவரத்தை என்னுடைய பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு கூறவில்லை என்றும்,

வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிராதில் நான் குடியிருக்கும் முகவரி அன்னூர் என்று சொல்லி உள்ளேன் என்றால் இடுகம்பாளையத்தில் உள்ள வீடு இடிந்து விட்டதால் அதற்கு மிக அருகில் உள்ள பிராதில் குறிப்பிட்ட முகவரியில் குடி இருக்கிறேன். வா.சா.ஆ.6 ஆதார் அடையாள அட்டையில் நான் 2013 ம் ஆண்டில் இருந்தே பிராதில் குறிப்பிட்ட முகவரியில் குடி இருப்பதாக உள்ளது என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது. அதில் உள்ள விவரங்களும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு உள்ள பட்டாவில் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்றால் எனது உடன் பிறந்த அண்ணன் ராமசாமி. 1974 ம் ஆண்டிலேயே எனது அப்பாவிற்கும், எனது அண்ணன் ராமசாமிக்கும் பாகம் ஏற்பட்டு தாவா சொத்து எனது அண்ணன் ராமசாமியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. நான் எல்லா தேர்தல்களிலும் ஓட்டு போடுவேன் என்றால் சரி தான். என்னுடைய வாக்காளர் அடையாள அட்டையும் வீட்டில் உள்ளது. நான் தாவா சொத்தில் குடி இருந்தால் அந்த முகவரிக்கு அடையாள அட்டைகள் இருக்கும் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் அதை தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 11.11.2020 முதல் 05.12.2021 வரை மட்டுமே வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். 01.01.1975 முதல் வில்லங்க சான்றிதழ் எடுத்து இருந்தால் தான் எனது அண்ணன் ராமசாமியின் பெயரில் சொத்து இருப்பது தெரிய வரும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா ராமசாமியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா.கெங்காராஜ்
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.